திரு. ரெ. பிச்சைமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, 60 ஆண்டு காலம் அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் பின்தங்கிய மக்கள். குறிப்பாக ஆதி திராவிட மக்கள். 60 ஆண்டுகளுக்கு முன்பு அந்த நிலம் எப்படி இருந்திருக்கும்—ஆகவே அதை இன்று நல்ல முறையில் சீர்திருத்தம் செய்து 60 ஆண்டுக் காலம் பயிர் செய்து வந்த அந்த ஏழை எளிய மக்களுக்கே அரசு கருணை கூர்ந்து அதை வழங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, அந்த நிலத்தை அரசு அவர்களுக்கே வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே பாதுகாக்கப்பட்ட காடாக அறிவிக்கப்பட்டு விட்ட காரணத்தினாலே இப்போது இந்த அரசு தன்னிச்சையாக எதையும் செய்ய முடியாது. மத்திய அரசினுடைய அனுமதி பெற்றுத்தான் இனிமேல் அந்த இடத்தைக் கொடுக்க வேண்டுமானால் கொடுக்க முடியும். ஆகவே மத்திய அரசு நிச்சயமாக —இங்கே தமிழ்நாட்டிலே காடுகள் எந்த அளவிற்கு இருக்க வேண்டுமோ—33 சதவீதம் என்று சொல்லப்படுகிறதே—அந்த அளவுக்கு இல்லை. ஆண்டுதோறும் ஏறத்தாழ 25,000 ஏக்கர் காடுகள் ஆக்கப்பட வேண்டும் என்று கொள்கையை வைத்து, எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே 1982 இலே இந்தக் காரியம் முடிந்து விட்டது. ஆகவே, இனி மாநில அரசு தன்னிச்சையாக இதிலே எதையும் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) எண்ணூர், திருவொற்றியூர் பகுதிகளில் கடல் அரிப்பால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் டி. கே. பழனிச்சாமி செங்கை சிவம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. டி. கே. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை, எண்ணூர், திருவொற்றியூர் பகுதிகளில் கடல் அரிப்பால் சாலைகள், மனைகள் மற்றும் வீடுகள் பாதிப்பதால் அப் பகுதியிலுள்ள மக்களின் உயிருக்கு ஏற்பட்டிருக்கும் அபாயம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

[டாக்டர் க. சந்திரசேகரன்] [1989 மே 5

அறிக்கை.

சென்னை மீன்பிடித் துறைமுகப் பகுதியிலிருந்து எண்ணூர் ஆற்று முகத்துவாரம் வரையுள்ள கடற்கரைப் பகுதிகள் வடகிழக்குப் பருவ காலத்திலே பெரிதும் கடலரிப்புக்கு உள்ளாகின்றன. அங்குள்ள மீனவர் குடியிருப்புக்கள் கடலரிப்பால் பாதிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு மீனவர்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பளிப்பதோடு அங்குள்ள எண்ணூர் நெடுஞ்சாலையைக் காத்திட வேண்டும் என்ற நோக்கோடும் அரசு அவ்வப்போது கடலரிப்பைத் தடுப்பதற்காகக் கற்குவியல் கடற்சுவர்கள் (Rubble Mound Sea Walls) அமைப்பதற்காக பணம் ஒதுக்கீடு செய்து பணிகளை நிறைவேற்றி வருகிறது. அவ்வாறு செய்யப்பட்ட பண ஒதுக்கீடு, நிறைவேற்றப்பட்ட பணிகள் ஆகியவற்றின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

வரிசை எண்.	நீளம்.	செலவிடப் பட்ட தொகை.	மதிப் பீட்டிற்கு அனுமதி வழங்கப் பட்ட வருடம்.	உள்ளடங்கிய கிராமம்.
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்.)		
1.	4/2 கி.மீ. முதல் 4/5 வரை 300 மீ.	8.80	1980	இராயபுரம்.
2.	4/5 கி.மீ. முதல் 5/520 வரை 1,020 மீ.	19.25	1982	நல்ல தண்ணீர் ஓடைக் குப்பம்.
3.	5/520 கி.மீ. முதல் 6/120 வரை 600 மீ.	16.50	1984	திருச்சினாங் குப்பம்.
4.	6/120 கி.மீ. முதல் 6/720 வரை 600 மீ.	18.50	1986	ஒண்டிக்குப்பம்
5.	10 கி.மீ. முதல் 11கி.மீ. வரை 1,000 மீ.	26.00	1986	பலகைத் தொட்டிக் குப்பம்.
6.	17 கி.மீ. முதல் 17/800 வரை 800 மீ.	23.00	1980	மீனவ கிராமங்கள் இல்லை.
7.	எல்.எஸ். 2520-3120 600 மீ.	15.90	1988	அப்பா நகர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1989 மே 5] [டாக்டர் க. சந்திரசேகரன்]

ஆயின் இவ்வாறு அமைக்கப்படும் கற்குவியற் கடற்சுவர்கள் நிரந்தரமான பாதுகாப்பைத் தராததினால், ஏற்கெனவே அத்தகைய கற்குவியற் கடற்சுவர்கள் அமைக்கப்பட்ட பகுதிகளே மீண்டும் கடலரிப்புக்குள்ளாவதால் கடந்த 1988–89 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகளுக்கான ஆணைகள் அரசால் வழங்கப் பட்டன:—

வரிசை எண்.	நீளம்.	ஒப்பளிக்கப் பட்ட தொகை.	உள்ளடங்கிய கிராமம்.	தற்போதைய நிலைமை.
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்.)		
1.	4/900 கி.மீ. முதல் 5/500 வரை—600மீ	25.00	நல்ல தண்ணீர் ஓடைக்குப்பம்.	பணி நடைபெற்று வருகிறது. விரைவில் நிறைவுறும்.
2.	5/500 முதல் 5/650 வரை—150மீ.	5.20	திருச்சினாங் குப்பம்.	ஷை
3.	5/650 முதல் 6/120 வரை —470 மீ.	19.20	ஷை	ஷை

மேற்கண்ட பணிகள் விரைவில் நிறைவுறும்.

இவை தவிர எண்ணூர் நெடுஞ்சாலையின் சில பகுதிகள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதைக் கருத்திற் கொண்டு அப்பகுதிக்குப் போதிய பாதுகாப்புக் கொடுப்பது பற்றிப் போக்குவரத்துத் துறைச் செயலர் அறையில் ஒரு கூட்டம் 16–2–1989 அன்று நடத்தப் பெற்றது. அதில் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை செயலர், நிலத்தடி நீர் துறையின் அலுவலர் (கடலரிப்பைத் தடுப்பதற்கான பணி தற்போது இத்துறையின் பொறுப்பில் உள்ளது) நெடுஞ்சாலைத் துறைத் தலைமைப் பொறியாளர், மீன்வளத் துறையின் இயக்குநர் ஆகியோரும் கலந்துகொண்டனர். அக்கூட்டத்தில் எண்ணூர் நெடுஞ்சாலையில் 11 கி. மீட்டரிலிருந்து 13/150 கி.மீ. வரையிலான மிகவும் பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் உடனடியாகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. அதற்குத் தேவையான முன் மொழிவு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[டாக்டர் க. சந்திரசேகரன்] [1989 மே 5

கனை அனுப்பும்படி நிலத்தடி நீர் தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டார். அவர் தனது அறிக்கையில் ஏற்கெனவே மீன்வளத்துறை இயக்குநரால் 11.00 கி.மீ. முதல் 13.00 கி.மீ. வரையிலான பகுதிக்கு ரூ. 52 இலட்சத்திற்கு அனுப்பிய திட்டத்தோடு தாம் அனுப்பும் 150 மீட்டர் பகுதிக்கு ரூ. 5.60 இலட்சத்திற்கான திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கும்படி கோரியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது. எண்ணூர் நெடுஞ்சாலையைப் பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

இதற்கிடையில் கற்குவியற் கடற் சுவர்கள் தற்காலிகப் பாதுகாப்பையே தருவதைக் கருத்திற் கொண்டு, நிரந்தரப் பாதுகாப்புக்கான வழி வகைகளைக் காணுமாறு பூண்டியிலுள்ள அரசு நீர் நிலையம் (Pondi Institute of Hydraulics and Hydrology) 1980 ஆம் ஆண்டில் கேட்டுக் கொள்ளப்பட்டது. பூண்டி நிலையம் தனது அறிக்கையை 1982 ஆம் ஆண்டில் அனுப்பியது.

ஆயின், சென்னைத் துறைமுகப் பெருந்திட்டத்தின் (Master Plan of Madras Port) அடிப்படையில் புதிதாக மாதிரி ஆய்வு நடத்தலாம் என முடிவு செய்யப்பட்டதால், பூண்டி நீர் நிலையத்தின் கருத்து நடைமுறைப்படுத்தப்படவில்லை. இத்தருணத்தில் திரு. வி. ஜோசுவா என்னும் கடற் பொறியாளர் (Off-shore Construction Engineer) கற்குவியற் கடற்சுவர் தற்காலிகப் பாதுகாப்பையே தரவல்லதாதலால், ஓர் நிரந்தர ஏற்பாடாக "மோடுலர் பிரேக் வாட்டர்ஸ்" (Modular Break Waters) என்ற முறையை கடைப்பிடிக்கலாமெனத் தெரிவித்தார். இவரது ஆலோசனையை குறித்து ஆராய அரசு திரு. எஸ். நாகேஸ்வரன், அப்போதைய தலைமைப் பொறியாளர் (நீர்ப்பாசனம்) மற்றும் திரு. ஏ. வி. சத்தியகாமன், தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) ஆகியோரைக் கொண்ட குழுவைக் கேட்டுக் கொண்டது. இக்குழு 6-12-1988 அன்று செயலர், கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை மற்றும் மீன்துறை இயக்குநர் ஆகியோர் முன் கூடியது. அப்பொழுது திரு. வி. ஜோசுவா அவர்கள் தனது திட்டத்தைப் பற்றி விரிவாக விளக்கினார். அவரது திட்டப்படி 100 மீட்டர் தூரத்திற்கு 'மோடுலர் பிரேக் வாட்டர்ஸ்' அமைக்க ரூ. 45 இலட்சம் வரை தோராயமாகச் செலவாகலாமென்று தெரிவித்தார். ஆயின், கற்குவியற் கடற்சுவர்கள் அமைக்க ஒரு கிலோ மீட்டருக்கு சுமார் ரூ. 65 இலட்சம் செலவாகிறது. விரிவான விவாதத்திற்குப் பிறகு திரு. ஜோசுவா அவர்களது ஆலோசனைகள் பயன் தரத் தக்கதா என்பதை மாதிரி ஆய்வு செய்து மூன்று மாதங்களுக்குள் தெரிவிக்கும்படி பூண்டி நீர் நிலையத்தை கேட்டுக் கொள்ளலாமென்று தலைமைப் பொறியாளர்கள் அடங்கிய குழு பரிந்துரை செய்தது. இதற்கிணங்க, திரு. ஜோசுவா அவர்களது ஆலோ

சனையையும் கருத்தில் கொண்டு வட சென்னை கடற் பகுதியில் கடலரிப்பை நிரந்தரமாகத் தடுக்கும் பணிகளை மாதிரி ஆய்வு செய்வதற்காக பூண்டி நீர் நிலையத்திற்கு அரசு தனது ஆணை எண் 261, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை, நாள் 27-12-1988-ன்படி ரூ. 2.5 இலட்சம் செலவினத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்த மாதிரி ஆய்வை வட சென்னை கடற் பகுதி முழுவதும் முடிப்பதற்கு 12 முதல் 22 மாதங்கள் கால அவகாசம் கேட்டு பூண்டி நீர் நிலையத்தின் இயக்குநர் ஒரு குறிப்பு அனுப்பி உள்ளார். இது குறித்து பூண்டி நீர் நிலையத்தின் இயக்குநருடன் பேசி மாதிரி ஆய்வை விரைவில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி மீன்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். ஆய்வின் முடிவுகள் வரப் பெற்றவுடன் இப்பகுதியில் கடலரிப்புக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. டி. கே. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட அறிக்கையை நான் பார்த்தேன். மத்திய நிறுவனமான எம்.ஆர்.எல்., எம்.எஃப்.எல்., திருவொற்றியூரிலுள்ள எம்.ஆர்.எஃப்., அசோக் லேலண்டு, எண்ணூர் அனல் மின் நிலையம்—அதிலே பல்லாயிரக்கணக்கான தொழிலாளத் தோழர்கள் பணியாற்றி வருகிறார்கள். அந்தத் தொழிற்சாலைகளிலே இன்றைக்கு ஆபத்தான நிலை. கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டு, மக்கள் நடமாட முடியாத அளவிற்கு, போக்குவரத்து போகமுடியாத அளவிற்கு அந்தப் பகுதி இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல. கடலோரமாக அமைந்திருக்கின்ற திருவொற்றியூர் நகரத்திலே சிறந்த பகுதிகளாக விளங்கி வருகின்ற இராமகிருஷ்ணா நகர், அன்னை சிவகாமி நகர் போன்ற இடங்களில் உள்ள வீடுகள் எல்லாம் பாதித்து, இன்றைக்கு இடிந்து விழும் சூழ்நிலை இருக்கின்றது. சாலைகள் பூராவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மீனவ சமுதாய மக்கள் நிம்மதியாக இரவு நேரங்களிலே அங்கே வாழ முடியவில்லை. திடீரென்று கடலரிப்பு ஏற்பட்டு, குடிசைகள் எல்லாம் பாதிக்கப்பட்டு, போக்குவரத்திற்கு எல்லாம் இடையூறு ஏற்படுகிறது. அது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், முன்னாள் அரசிற்கும் பல முறை மனுக்கள் அனுப்பப்பட்டு, நேரிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இது நாள் வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அறிக்கையைத்தான் பார்க்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. பம்பாய் போன்ற நகரங்களில் எல்லாம் கடலிலிருந்து நிலத்தை நாம் மீட்டுக்கொள்கிறோம். ஆனால், தமிழகத்திலே உள்ள கடல்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வர்ணனையா? ஒரு கேள்விதான் கேட்கவேண்டும்.

திரு. டி. கே. பழனிச்சாமி : கடல்தான் நம் நகரத்தை எடுத்துக்கொள்கிறது. எனவே, தயை கூர்ந்து போர்க்கால நடவடிக்கையாக நடத்தப்படுமா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துலைவர் அவர்களே, சென்னை இராயபுரம் மீன் பிடித் துறைமுகம் தொடங்கி, எண்ணூர் ஆற்று முகத்துவாரம் வரையுள்ள கடற்கரைப் பகுதிகளில் கடல் அரிப்பு ஏற்படுகிறது. கடல் அரிப்பைத் தடுக்க, கற்குவியற் கடற் சுவர் என்ற பணி கடந்த காலத்தில் ரூபாய் 112.85 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. தற்போது ரூபாய் 102.82 இலட்சத்திற்கான மதிப் பீடுகள் அரசின் பரிசிலனையில் உள்ளது. இதற்கிடையில் அந்தக் கடற் சுவர்கள் கடலோரத்தில் உள்ள அந்த நெடுஞ்சாலைகளைப் பாதுகாக்க வல்லதாகவே உள்ளன. அங்கு வாழுகின்ற மீனவர்களின் நலன் காக்கின்ற வகையில் அவர்கள் கடலுக்குச் செல்வதற்காகவும், அந்தக் கடற்கரையில் வலைகளைக் காயவைப் பதற்கும், இடைஞ்சலாக இருப்பதால் அதற்கு ஒரு மாற்று ஏற்பாடாக எவ்வாறு கடற் சுவர்கள் ஏற்படுத்தலாம் என்பது குறித்து பூண்டியிலுள்ள மத்திய நீர் நிலையம் ஒரு ஆய்வினை நடத்துகின்றது. அந்த ஆய்வுக்காக அரசின் மூலம் ரூபாய் 2.5 இலட்சம நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த அறிக்கை பெறப்பட்ட வுடன் நிரந்தரத்தீர்வு காண்பதற்கு அரசு முயற்சி மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் பூண்டி ஹைட்ராலிக்ஸ் மற்றும் ஹைட்ராலஜி பயிற்சி நிறுவனத்தின் மூலமாக 10 இலட்சம் ரூபாயை ஒதுக்கி, 1982-லேயே ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டது. அதன் மூலம் கடந்த அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(முற்பகல் 10-30)

அதற்கு மாறாக 1980-லிருந்து 1988 வரையில் குத்தகைதாரரிடம் அந்த கடல் ஓரப் பகுதியில் கல்லை அடைப்பதற்கு 100 கிலோ எடையுள்ள கல்லை, மிகக் குறைவான எடையுள்ள கல்லை—400 கிலோ, 500 கிலோ எடையுள்ள கல்லை போட்டிருந்தால் நிச்சயமாக அந்தக் கடல் அரிப்பைத் தடுத்து இருக்க முடியும். 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் போட்டு வீணாக செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கும் தொடர்ந்து அது இருக்கிறது. இதன் மூலமாக சென்னை, புறநகரில் இருக்கிற அந்த நெடுஞ்சாலை, ஹைவேஸ் ரோடு, சென்னை அனல் மின் நிலையம் பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை; நவம்பர், டிசம்பர் மாதங்களில் பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நடவடிக்கைகளை உடனடியாக இந்த Pondi Institute of Hydraulics and Hydrology

1989 மே 5] [திரு. செங்கை சிவம்]

நிறுவனத்தின் மூலமாக பெறக்கூடிய ஒரு குறிப்பையும் வைத்துக்கொண்டு வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களின் மூலம் அதன் உதவியுடன் இதை நிரந்தரமாக கட்டுவதற்கு இந்த அரசு முயற்சிக்குமா? ஆகவே, நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏற்படுகிற அத்தகைய நிலைகளை தடுக்க முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூண்டி நிலையம் தனது ஆராய்ச்சியை முடிப்பதற்கு 12 முதல் 22 மாத காலம் அவகாசம் கேட்டிருக்கிறார்கள். ஆனால், அரசாங்கம் விரைவில் அந்தப் பணியை முடித்து அறிக்கையை சமர்ப்பிக்க அறிவுறுத்தியுள்ளது. அறிக்கை பெறப்பட்ட உடன் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்களைப் பரிசீலனை செய்து நிச்சயமாக நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. சட்ட முன்வடிவுகள்.

(அ) மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத்